Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




ஹஸ்ரத் முஹைியுதின்அல்-கலீபஃத்துல்லாஹ்
முனீர் அஹ்மத் அஜீம் (AS)


**20 oct 2017**
(29 Muharram 1439 AH)


**மொழியாக்கம்/Translation**
**TJSI பத்திரிகை குழுமம்- TJSI publication group**
**வெளியீட்டு**
**அமீர்,**
**ஜமாஅத் தமிழ்நாடு**



**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**


# ஜுமுஆ பேருரை

## தலைப்பு :

## வெளிப்படுத்தப்பட்ட துஆக்கள் பாகம்-4




உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் கலீபத்துல்லாஹ்(AS) அவர்கள் தஷ்ஹத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி "துஆக்கள்" என்ற தலைப்பில் **நிகழ்த்தி வரும் தொடர் ஜுமுஆ பேருரையில் நான்காவது பாகத்தை**" தொடர்ந்தார்கள்

அல்ஹம்துலில்லாஹ் ஸூம்ம அல்ஹம்துலில்லாஹ் முற்றிலும் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் அருளால் தான் நான் இன்று **"துஆக்கள்"** என்ற தலைப்பில் நிகழ்த்தி வரும் தொடர் ஜுமுஆ பேருரையில் நான்காவது பாகத்தை தொடரமுடிந்தது ,இதில் ஆச்சரியம் என்னவென்றால் அல்லாஹ் எனக்கு வெளிப்படுத்திய துஆக்களை நீங்கள் திருக்குர்ஆனிலும் காணமுடியும், மேலும் கடந்த காலங்களில் தோன்றிய அவனது தூதர்களுக்கு வெளிபடுத்தப்பட்ட அத்தகைய துஆக்களையும், இன்னும் அவன் மஸீஹ் மவூத் (அலை) அவர்களுக்கு வெளிபடுத்தப்பட்ட குறிப்பாக நான் இப்பொது குறிப்பிட போகும் துஆக்களையும் இக்காலத்தின் கலீஃபத்துல்லாஹ் அதாவது அவனது கலீபாவான இந்த எளியவனுக்கு மீண்டும் இறக்கியுள்ளான். அல்ஹம்துலில்லாஹ்,

இவ்வாறு இருக்கும் போது ,நான் ஒரு போலியானவனாகவும், பொய்யனாகவும் இருந்தால் என் மீது அல்லாஹ் இத்தகைய துஆக்களை இறக்கி இருப்பானா? எனது எதிரிகள் இந்த துஆக்களைப்பற்றி என்ன கூற முடியும்? இவைகளும் கூட ஷைய்தானுடையவை என்றா? (நஊதுபில்லாஹ் அல்லாஹ் மன்னிப்பானாக). மேலும் இவர்கள் இத்தகைய துஆக்களுக்கு ஷைத்தானிய முத்திரைக்குத்திவிட்டால் பின்னர் திருகுர்ஆன் மீதுள்ள நம்பிக்கையையும் இவர்கள் முதுகு புறமாக தூக்கி எறிகின்றார்கள் என்பதே ஆகும், இன்னும் (கூற வேண்டுமானால்) அவர்கள் திருக்குர்ஆனை ஓதும் தகுதியையும் இழக்கின்றனர், என்னை இழிவுபடுத்தவேண்டும் என்று இவர்கள் செய்யும் இத்தகைய முட்டாள் தனத்தினால் இந்த புனித வேதத்தை முதுகுப்புறமாக எறிவது மட்டுமின்றி அதன் , மேலான போதனைகளையும் இழிவுபடுத்துகின்றார்.

திருக்குர்ஆனிலுள்ள ஒரு துஆவில் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

**(எனது இறைவா!) பூமியின் மீது எந்த நிராகரிப்பாளரையும் விட்டு வைக்காதே!**

மக்களில் யாருடைய விதியில் இறைமறுப்பு (நிராகரிப்பு) எழுதபட்டுவிட்டதே,அவர்களால் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது (அதாவது, நிராகரிப்பு என்னும் இந்நிலை மற்றும் அதனை பின் தொடர்ந்து வருகின்ற தண்டனை) என்பதை (மேற்கண்ட) இந்த துஆவின் மூலம் நாம் புரிந்து கொள்கின்றோம்.ஆனால் நாம் இந்த துஆவில் ஒரு விஷயத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும், அதாவது இது அனைத்து நிராகரிப்பாளர்களையும்

அடியோடு அழித்து விடுவதற்கான ஒரு துஆ அல்ல; அ(ந்த துஆவின் பொருளான)து அவ்வாறு இருந்திருக்குமானால், பிறகு மக்கள் எப்படி இன்று முஸ்லீம்களாக மாறியிருக்க முடியும்?

உண்மையில் அதன் பொருளானது,

**(இறைவா!) அனைத்து மக்களிலும் எவருடைய விதியில் அவர்கள் நிராகிப்பாளர்கள் என்று எழுதப்பட்டுள்ளதோ, அவர்களை இவ்வுலகிலிருந்து அகற்றிவிடுவாயாக!**

இந்த துஆ உண்மையில் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களால் பிராத்திக்கப்பட்டது. அதாவது இப்போது, இந்த நிராகரிப்பாளர்கள் தங்களைப்போன்றே நிராகரிக்கின்ற குழந்தைகளை உற்பத்தி செய்யமுடியும். ஆகையால், (அல்லாஹ்வே) அவர்களை அகற்றி விடுவது சிறந்ததாகும். என்பதே அன்னாரின் துஆவாக இருந்தது

அதனால், எனது சூழ்நிலையிலும்,எனது விஷயத்திலும், இந்த நிஸாமே - ஜமாத்தின் பெயர் தாங்கிய பாதுகாவலர்கள் நான் பெற்றுக்கொண்டிருந்த இறை செய்திகளின் விஷயத்தில் நிராகரிப்பாளர்களைப்போல் செயல்பட்ட போது அல்லாஹ் (சுப்ஹான) இந்த துஆவை எனக்கு காட்டினான்:

**ரப்பிஜ் அல்னி காலிபன் அலா கைரி.**

**Rabbij alni Ghaleban ala Ghayri.**

**எனது எஜமானனே! எனக்கு அநீதியிழைக்கும் கொண்டு இருப்பவர்களின் மீது எனக்கு வெற்றியை வழங்குவாயாக!**

மேலும் அதன் பிறகு,எனது வெற்றியையும் எனது துஆஅல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும் காட்டக்கூடிய இரண்டாவது (வஹீ) வெளிப்பாடு இதுவாகும்:

**வஜ்அல்னி காலிபதன்ஃபித் - துன்யா வத்(d)தீன்.**

**Wajalni Ghalebatan fid-Dunya wad-Deen.**

**இவ்வுலககாரியங்களிலும் அதே போன்று ஆன்மீக காரியங்களிலும் எனக்கு வெற்றியை வழங்குவாயாக!**

**வஜ்அல்னி நாஃபி-அன் ஃபீஹா(ஃ)திஹித் திஜாரா.**

. **Wajalni naafe-an fi hazehit tejara**

**என் இறைவா! எனக்காக இந்த பரிவர்த்தனையை (கொடுக்கல் வாங்கல்) நன்மைக்குரியதாகவும் / இலாபத்திற்குரியதாகவும் ஆக்குவாயாக**

இங்கு இந்த துஆவில் குறிப்பிடப்படுகின்ற “பரிவர்த்தனை” என்பது பௌதீக பரிவர்த்தனையை குறிப்பதில்லை மாறாக, திருக்குர்ஆன் இதை **“அஸாபின் அலிம்”** (வேதனையளிக்கக்கூடிய தண்டனை) என்று குறிப்பிடுகின்றது. மேலும் இந்த துஆவிலும் இந்த அர்த்தத்திலேயே வருகின்றது( அதாவது வேதனையளிக்கும் தண்டனையிலிருந்து என்னை தவிர்க்கக்கூடிய அத்தகைய பரிவர்த்தனைகள் என்பதாகும்)

**ரப்பி ஸாலித்னி அலன் -னார்.**

**Rabbi salitni alan-Naar.**

**எனது எஜமானனே! நெருப்பின்தண்டனையின் மீது எனக்கு மேன்மையை (மேலோங்கியகையை/ வெற்றியை) வழங்கிவிடுவாயாக!**

அதாவது, அந்த நெருப்பை(நரக) எனது கட்டளையின்/கட்டுப்பாட்டின் கீழ் வரச்செய்வாயாக!

ஸபூரில் (தாவூதுடையசங்கீதம்) ஹீப்ரு மொழியில் ஒரு துஆ உள்ளது மேலும் அதே துஆ புனித மத்தேயுவிலும் (பைபிளின் உள்ள ஒரு அத்தியாயம்) குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் மொழி பெயர்ப்பு இவ்வாறாக உள்ளது :

**அல்லாஹ்வே! நான் உனது இரட்சிப்பை (எனக்கு) வழங்கிக்கொண்டிருக்கவும் கஷ்டங்களிலிருந்து மீட்சி பெறவும் (உன்னிடத்தில்) வேண்டுகிறேன்.**

இது துஆவடிவத்தில் அமையப்பெற்ற ஒரு முன்னறிவிப்பாகும்.

ஆகையால், இது போன்ற (இன்னும்) பல துஆக்கள் அறிவதற்கு இந்த எளியவனுக்கு அல்லாஹ் (சுபஹான) வழிகாட்டியிருக்கின்றான்; அத்துடன், அவனது உயரிய ஞானத்தினால், அவன் எனக்கு இந்த துஆவையும் வெளிப்படுத்தியிருக்கின்றான்:

**எனது இறைவனே ! உன்னை என் மீது வெளிப்படுத்துவாயாக, உன்னை என் மீது வெளிப்படுத்துவாயாக!**

அதன் பிறகு அவன் தொடர்ந்து எனக்கு இந்த துஆவை கற்றுத்தந்தான்:

**அல்லாஹும்ம இன் அஹ்லக்த ஹாதிஹில் - இஸா பத:பலன் துஹ்பத: பில் - அர்லி அபதா**

**Allaahumma in ahlakta haadhi hil-isaa bata falan tuhbada fil-ardi abada.**

**எனது இறைவனே ! நீ உனது அடியார்களை இந்த போரிலேயே மரணிக்க விட்டுவிட்டால், பின்னர் உன்னைப்போற்றி புகழ்வதற்கு ஒருவருமே (நம்பிக்கைகொண்டவர்கள்) எஞ்சியிருக்கமாட்டார்கள்.**

**இந்த சிறப்புக்குரிய துஆ பத்ர்போருக்கு முன்பாக ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களால் அல்லாஹ்விடம் செய்யப்பட்ட துஆ இதுவேயாகும்.**

**எனது இறைவனே ! நீ உனது அடியார்களை இந்த போரிலேயே மரணிக்க விட்டு விட்டால், பின்னர் உன்னைப்போற்றி புகழ்வதற்கு (ஒரு உண்மையான புகழ்). எவருமே ((நம்பிக்கைகொண்டவர்கள்) எஞ்சியிருக்கமாட்டார்கள்**

**இந்த துஆவை எனது ஜாமத்திற்கு இவ்வாறு செய்யுமாறு கற்றுக்கொடுக்கிறேன், அதாவது**

**எனது இறைவனே! நீ இந்த ஜமாஅத்தை அழிய(ச்செய்து)விட்டால் (உனது ஆன்மீகவெளிப்பாட்டையும், இக்காலத்தில் உன்னால் அனுப்பட்ட இந்த எளியவனின்**

**உண்மைத்தன்மையையும் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்ள முடியும்?), பின்னர் நீ இக்காலத்தில் எங்கள் மீது எதனை அருளியிருக்கின்றாயோ அதற்காக உன்னைப்போற்றி புகழ்வதற்கு , மேலும் உனது இந்த உதவிக்கு நன்றி செலுத்துவதற்கும் ஒருவருமே எஞ்சியிருக்கமாட்டார்கள்.இதை நீங்கள் அனைவரும் செய்யுமாறு நான் உங்களை ஊக்குவிக்கின்றேன்**

எனவே, எனது அருமையானவர்களே! ஒரு ஜமாத்தானது அதிலுள்ள மக்களின் எண்ணிக்கையினாலோ அல்லது அ(ந்)த (ஜமாஅத்தி)ன் பெயரில் உள்ள பலம் வாய்ந்த கான்ங்க்ரீட் பள்ளிவாசல்களின் எண்ணிக்கையினாலோ அல்லது வேறு எந்த உலக ஆதரவினாலும் தீர்மானிக்கப்ப்படுவதில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள்; **அல்லாஹ்வின் ஓர் ஜமாஅத் என்பது, அது அல்லாஹ்வின் மீதும் அவன் (இவ்உலகிற்கு) தூதராக அனுப்பியவர் மீதும் கொண்டுள்ள ஈமானை (நம்பிக்கையை) வைத்தே தீர்மானிக்கப்ப்படுகின்றது**. **மேலும் அந்த ஜமாஅத் எந்த பொய் தெய்வத்தையும் தன்னுடன் இணைக்காது**. இன்னும் அது தனது ரப்பினுடைய இன்பத்தை தேடுவதையே அதன் ஒட்டுமொத்த குறிக்கோளாக கொள்கின்றது. மேலும் இத்தகைய ஜமாஅத் அதன் உண்மையான முழு இன்பத்தையும் அதனுடைய படைப்பாளனிடத்திலேயே கண்டறிகின்றது. ஆகவே இவ்வாறு செய்யப்படும் அல்லாஹ்விற்கான இஃபாதத்தே ஒரு உன்னதமான உண்மையான இஃபாபத்தாக இருக்கமுடியும். இதை உங்களுக்கு மேலும் உணர்த்துவதென்றால் கடந்த இஸ்லாத்தின் பொற்காலமான நமது அருமை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்திலும் இறைஇல்லங்கள் வெறும் வைக்கோல்களாலும் இரும்பு தகடுகளாலும் கட்டப்பட்டாலும் ஈமான் அசைக்க முடியாத கான்க்ரீட்டை போன்று உறுதியாக இருந்தது., ஆனால் இப்போதோ குர்ஆன்வசனங்களால் அலங்கரிக்கப்பட்ட, மிகப்பெரிய கான்க்ரீட்டால் சிறப்பாக கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் இருந்தாலும் அங்கு ஈமான் (நம்பிக்கை) காய்ந்து போன வைக்கோலை போன்று இருக்கிறது எனவே அத்தகைய பள்ளிகளால் என்ன பயன் ? மேலும் இத்தகைய பள்ளிகள் காய்ந்த கிளைகளில் உள்ள காய்ந்த உயிரற்ற இலைகளை போல நொறுங்கி போகும். மேலும் இவ்வகையான பள்ளிகளில் வழிபடுபவர்களில் பெரும்பாலனவர்கள் உலகத்தேவைகளுக்கு பின்னால் மூழ்கியும் மேலும் உண்மையான இறை வழிபடுபவர்கள் இல்லாமல் இத்தகைய பள்ளிகள் காலியாக உள்ளது. திருக்குர்ஆன், வழிபடுபவர்களின் இதயத்தில் நிரம்பி அதே நேரத்தில் அதன் போதனைகளையும் துஆக்களையும் நடைமுறை படுத்தாமல் இத்தகைய பள்ளிகளில் இறைவசனங்கள் ஒரு அலங்கார பொருளை போல அலங்கரிக்க படுவதால் என்ன முக்கியத்துவம் இருக்கப்போகின்றது.

எனவே ஒரு ஜமாஅத்தின் முன்னேற்றம் என்பது அதன் ஆன்மீக முன்னேற்றத்தை வைத்தே அமைகின்றது என்பது தெளிவாகின்றது மேலும் இப்படிப்பட்ட முன்னேற்றம் குறிப்பாக மற்றவர்களை விட நாங்கள் தான் சிறந்தவர்கள் என்று எவர்களின் மனதிலும் வெறுப்புணர்வை உருவாக்காமல் இருக்கும் முன்னேற்றமே ஒரு சிறந்த முன்னேற்றமாக இருக்கும்,அல்ஹம்துலில்லாஹ்

.

.மேலும் இப்போது நான் உங்கள் முன் ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் இறைவனிடம் செய்த சில துஆக்களை வைப்பேன் இன்னும் குறிப்பாக இத்தகைய துஆக்களை எனக்கு 2003 மற்றும் 2004 ம் ஆண்டுகளில் மீண்டும் இறக்கியுள்ளான்.

மேலும் இத்தகைய துஆ கள் குடும்ப உறவுகள் சம்பந்தப்பட்டது

**ரப்பி அர்ஸிஹூ ஜஸா-அன் அவ்ஃபா**

**Rabbe arzeho jaza-an awfa.**

**எனது இறைவனே! அவளுக்கு எல்லா விதமான வெகுமதிகளையும் கொடுப்பாயாக!**

இந்த துஆவில், '**அவள்**' என்ற வார்த்தை துஆ செய்யும் மனிதரின் மனைவியை குறிக்கின்றது

**ரப்பி அஹ்ஸன் ஸவ்ஜதி**

**Rabbe ahsan zawjati.**

**எனது இறைவா! என் மனைவிக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக!**

**ரப்பிஷ் ஃபி ஸவ்ஜதி ஹாதா வஜ்அல்ஹா பரகாதின்ஃபிஸ் - ஸமாயிவபரகாதின் ஃபில் அர்ள்**

**Rabbish fi zawjati haza wajalhaa barakaatin fis-samaaé wa barakatin fil arz**

**எனது இறைவா! எனது இந்த மனைவிக்கு ஆரோக்கியத்தை வழங்கி மேலும் அவளுக்கு இம்மையிலும் மறுமையிலும்அருள்களை வழங்குவாயாக!**

**ரப்பி ஸித்னி உம்ரி வஉமாரா ஸவ்ஜதி ஸியாதத் -தன் உமாரா ஹாதா**

**Rabbe zidni umri wa umara zawjati zyad-atan umara haza**

**என் இறைவா! என் மனைவி மற்றும் எனது ஆயுட்காலத்தை நீடிக்கச்செய்வாயாக.**

**ரப்பி லா துஸய்யி உம்ரி வ உம்ரஹா ஃபஹ்ஃபஸ்னி மின் குல்லி ஆஃபதின்**

**Rabbe la to zayye umri wa umraha fafazni min qulli aafatin**

**என் இறைவா! எனதிந்த மனைவி மற்றும் எனது வாழ்வை வீண் போகாதிருக்கச்செய்வாயாக! மேலும் எங்களுக்கு அனைத்து இன்னல்களிலிருந்தும் அடைக்கலமளிப்பாயாக! எனது வழியில் வரக்கூடும் அனைத்துப்பிரச்சனைகளிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக!**

இன்னும் இத்தகைய துஆக்கள் ஒரு கணவன் தனது மனைவிக்காக தினமும் செய்ய வேண்டிய துஆக்களாகும் , மேலும் இதன் மூலம் குடும்பத்தில் இணக்கமும் அமைதியும் நிலவும், இன்ஷா அல்லாஹ்.

பிரார்த்தியுங்கள்!!!(அல்லாஹ்வைஅழையுங்கள்), இத்தகைய பிரார்த்தனைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றால் ,உங்கள் மனதை வேறு ஏதாவது ஒன்றை நினைத்து கொண்டு படைத்த இறைவனின் முன் மனதை அலைபாய விட்டவாறு வெறும் உதட்டளவில் அவன் முன் துஆவில் ஈடுபடாமல், அவனை உங்கள் கண்முன் மனதார காணுவதாக நினைத்தவாறு உங்கள் இதயபூர்வமாக ஆத்தம திருப்தியுடன் இதயத்தின் ஆழத்திலிருந்து துஆவை வெளிவரச் செய்யுங்கள், மேலும் இவ்வாறு செய்யும்போது அந்த ஏக இறைவன் துஆ செய்பவரின் பிராத்தனையில் மகிழ்ந்தால் அவரின் துஆவை ஏற்றுக்கொள்கின்றான். இன்னும் ஒருவரின் துஆவை அந்த தூய இறைவன் ஏற்றுக்கொண்டால் இதைவிட அந்த அடியானுக்கு ஒரு மிக அற்புதமான அதிசயம் என்ன இருக்க போகின்றது? யாரேனும் வேதனையால் நிரம்பி அல்லது ஒரு பிரச்சனைக்கு இரையாகின்ற நிலையில், அவரது இதயம் வேதனையினால் நிரம்பிகொந்தளிக்கின்ற இந்நிலையில், அவர் அவரது இறைவனை அழைக்கின்றபோது, அவரது இறைவன் அவரது குரலை கேட்கின்றான். பிறகு அந்த நொடிப்பொழுதே, அவரது கைகள் இறைவனின் கைகளாக ஆகிவிடுகின்றது.

இறைவன் ஒரு மறைவான பொக்கிஷத்தை போன்றவன் ஆவான். மேலும் அவன் யாரை விரும்புகின்றானோ இன்னும் யாரிடம் மகிழ்கின்றானோ, எவர் கழிவிரக்கம் கோருகின்ற நிலையில் இருக்கின்றாரோ அத்தகைய மக்களின் மூலம் தனது முகத்தை அவன் காட்டுகின்றான். மேலும் அவன் யாரை விரும்புகின்றானோ மற்றும் இறைவனுக்காக தன்னையே (தவநிலை) அர்ப்பணிக்க தயாராக இருப்பவர்களுக்கும்,தனது சிறப்பான அத்தாட்சியை வெளிப்படுத்துகின்றான். எப்போது அவர்களின் கவலைகளும் துயரங்களும் அவர்களால் தாங்கிக்கொள்ளக்கூடிய எல்லையை மீறும்போது அவரை படைத்தவன் அவர் அருகிலே இருப்பதை உணர்கின்றார்,அப்போது அந்த ஏகவனாகிய அல்லாஹ் சுபஹானஹுதாலா தனது அடியானுக்கு தனது அடையாளத்தை மிக விரைவாக வெளிப்படுத்துகின்றான். மேலும் எவர் அல்லாஹ்விற்காக முழுமையாக தன்னை அர்ப்பணித்து தியாகம் செய்கின்றார்களோ அவர்களை அந்த தூய இறைவன் எந்த அளவிற்கு நேசிக்கின்றான் என்றால் ஒருவர் தனது ஈன்றெடுத்த சொந்த மகனிடம் காட்டும் நேசத்தை விட அதிகமாக அவனை படைத்த ரப்பு அவன் மீது அன்பை காட்டுகின்றான். மேலும் தான் நாடியவர்களுக்கு ஆதரவாக அவனது அத்தாட்சிகளையும் அடையாளங்களையும் அசாதாரண முறையில் நிரூபித்து காட்டுகின்றான், இவ்வாறாக அவன் தன்னை வெளிப்படுத்தும் அசாதாரண நிலையின் வீரியம் **<u>“ஒரு விழித்தெழுந்த சிங்கத்தை ஒத்திருக்கும்”</u>** (சுபஹானல்லாஹ்)

இறைவன் மறைவிலும் மறைவானவன் மேலும் இவ்வகை மக்கள் அவனை தானாக வெளிப்படுத்த செய்கின்றனர் ,இன்னும் **<u>அவன் ஆயிரம் திரைக்கு பின்னால்</u>** இருந்தாலும் இவ்வகையான மக்கள் அவனை வெளிப்படுத்தி காட்டுகின்றனர்

உலகெங்கிலும் உள்ள எனது அன்பிற்குரிய ஸஹாபிகளே! நீங்கள் அனைவரும் இத்தகைய மக்களாக ஆகிவிடுங்கள் அதாவது அல்லாஹு சுபஹானஹுதாலா தனது அடையாளங்களை எவரின் மூலம் வெளிப்படுத்துகின்றானோ அவ்வகை மக்களாக மாறிவிடுங்கள் மேலும் நீங்கள் எங்கு இருந்தாலும் இவ்வகை மக்களுடன் இணைத்துக்கொள்வதன் மூலம் அவன் உங்களுக்கு அசாதாரண முறையில் அவனது அத்தாட்சிகளை உங்களுக்காக வெளிப்படுத்த கூடிய மக்களாக ஆகிவிடுங்கள் இன்னும் உங்களுக்காக அவன் அவனது அடையாளங்களை விரைவாக வெளிப்படுத்துவனாக இன்ஷா அல்லாஹ் ஆமீன்

இதற்கு உங்கள் மத்தியில் ஒரு எடுத்துக்காட்டாய் வைகின்றேன், சமீபமாக இந்தியாவில் தமிழ்நாட்டை சார்ந்த நமது சகோதர சகோதரிகள் இறைபுரத்திலிருந்து தோன்றிய இந்த எளியவனின் உண்மைத்தண்மையை அறிந்து **காலத்தின் நபியுல்லாஹ்வாக ஏற்று பையத் செய்துள்ளார்கள்**,மேலும் இந்த சகோதரர்களில் ஒருவர் தான் எனது அன்பிற்குரிய ஸஹாபி சலீம் சாஹிப் ஆவார்கள். அவர்கள் ஒரு அழகிய கனவை கண்டுள்ளார்கள் மேலும் அந்த அழகிய கனவில் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் சுபஹானஹுதாலா அவருக்கு மிகத்தெளிவாக **நான் அவனுடைய நபி என்னும் உண்மைத்தன்மையை காட்டியுள்ளான்**. அவர் இந்த அழகிய கனவை அதிக அதிகமாக அவனிடத்தில் துஆவினாலும் இன்னும் அவர் அதிகமாக தஹஜ்ஜுத் தொழுகையில் ஈடுபடுவதன் மூலமும் இதை பெற்றுள்ளார், அல்ஹம்துலில்லாஹ், வாழ்வில் ஒவ்வொரு தருணத்திலும் அது மகிழ்ச்சியான தருணமோ அல்லது சோதனையான தருணமோ அல்லது வேறு எந்த நிலையிலும் ஒரு இறை நம்பிக்கையாளர் இவ்வாறே செய்யவேண்டும் அதாவது அத்தருணத்தில் உண்மையான ஒரு அடியான் அவனது படைத்த இறைவனின் பக்கமே திரும்பவேண்டும், ஏனென்றால் நம்மை படைத்த ரப்பு உண்மையாக அவனை நாடும் இதயத்தை ஒருபோதும் மறுப்பதில்லை.

எனது ஸஹாபி சலீம் சாஹிப் இது சம்பந்தமாக எழுதுகின்றார்:-

“. . . . . **ஆனால் எனது உள்ளம் அமைதியற்று இருந்தது, மேலும் நான் எனது தஹஜ்ஜுத் தொழுகைகளில் தினமும் அழுது கொண்டிருந்தேன், ஏனென்றால் என்னால் நிசாம் ஜாமத்தையும் இன்னும் முக்கியமாக ஐந்தாவது கலீ:ஃபத்துல் மஸீஹ்கை நிராகரிப்பது என்பது என்னால் ஜிரணிக்க முடியவில்லை**.

**மேலும் ஹுஃஸ்ர், உங்களது போதனைகளையும் வாதங்களையும் இன்டர்நெட்டின் வழியாக சிறுக சிறுக படித்த அதே வேளையில் எனது சகோதரர் நஷீர் சாஹிப் மற்றும்…… . . . . . . . .(அவர் சிலரது பெயர்களை குறிப்பிட்டு எழுதியுள்ளார்) மற்றும் எனது மனைவியிடம் கூற ஆரம்பித்தேன் இந்த செய்தியை கேட்ட அவர்கள் முதலில் எதிர்த்தாலும் சிறிது நாட்களுக்கு பின்னர் இந்த வாதத்தில் உள்ள உண்மைத்தன்மையை உணர ஆரம்பித்தனர், மேலும் இந்த செய்தியை கேட்ட சிலருக்கு கனவும் வந்தது (குறிப்பாக முபீனா சாஹிபா மற்றும் நஷீர் சாஹிப்) இருப்பினும் எனக்கு உங்களுக்கும் ஜபருல்லாஹ் டொமென் சாஹிப் அவர்களுக்கும் உள்ள பிரச்சனை சம்பந்தமாக ஒரு சந்தேகத்திலேயே இருந்து வந்தேன்**

இவ்வாறு இருக்கின்ற நேரத்தில் நான் ஒரு அழகிய கனவு கண்டேன், **அதில் நீங்கள் எனது அலுவலகத்திற்கு ஒரு கட்டுப்பாடு அதிகாரியாக வருகை தந்துள்ளீர்கள் ,மேலும் நீங்கள் எனது அலுவலகத்தில் எனது அலுவலக சக தோழர்களுடன் ஒரு சந்திப்பை வைக்கின்றீர்கள் இன்னும் அந்த சந்திப்பின் போது நான் மிகுந்த சந்தோசமாக இருப்பதாக உணர்கின்றேன், அப்போது எனது அலுவலக சகாக்கள் உங்களை பார்த்து இவர் யார்? என்று கேட்கின்றனர் அதற்க்கு நான் இவ்வாறு பதில் அளிக்கின்றேன் ,அதாவது உங்களை பார்த்து “இவர் அல்லாஹ்வின் நபியாவார்” என்று மீண்டும் எனது அலுவலக தோழர்கள் இதே கேள்வியை கேட்கின்றனர் அதற்க்கு நான் மீண்டும் கூறுகின்றேன் “இப்போது உலகம் முழுவதிற்கும் இவரே நபியாவார்”** என்று.அதன் பிறகே நான் Email வழியாக உங்களை சந்திப்பதற்கு வேண்டிக்கொண்டேன். . . . .

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் தனது அடியார்களில் தான் யாரை நாடுகின்றானோ,யாரை அவன் விரும்புகின்றானோ அவர்களை இதைப்போன்ற அனைத்து வழிகளிலும் வழிநடத்துகின்றான். இதன்படி அவன் தான் விருப்புகின்றவரின் வாழ்வில் மிக சிறந்த சீர்திருத்தத்தை மிக சரியான தருணத்தில் செய்து அவர்களை நேர்வழியில் நடத்துகின்றான், மேலும் இதன் மூலம் இந்த அருளுக்குரிய மக்கள் இந்த ஒப்பற்ற அருளை பெறுவதன் விளைவாக **தான் வாழும் காலத்திலேயே அந்த உண்மையான “லைலத்துல் கத்ரை” பெறுகின்றனர்**,அல்ஹம்துலில்லாஹ் இத்தகைய மேலான அருளுக்கு சமமாக அவனுக்கு நன்றி செலுத்துவது என்பதை நாம் நினைத்துகூட பார்க்கமுடியாது சகோதரர்களே!

ஆகவே, எனது அன்பிற்குரியவர்களே! உங்கள் மனதில் ஒன்றை நன்றாக புரிந்துகொள்ளுங்கள் நீங்கள் அனைவரும் மற்ற சாதாரண மனிதர்களை போன்றவர்கள் அல்ல மாறாக **நீங்கள் அல்லாஹ்வின் கலீஃபாவை (கலீஃபத்துல்லாஹ்), இந்த காலத்தின் மஸீஹக்கை அடையாளம்** கண்டு ஏற்றுக்கொண்டதால் அந்த ஏக இறைவனின் அருளையும் கருணையையும் பெற்ற அருளுக்குரிய மக்கள் ஆவீர்கள், இப்போது எனக்கு இறங்கிய இந்த வஹீயின் பக்கம் கவனம் செல்கின்றது அதாவது

**“எப்போது அல்லாஹ் உங்களுடன் இருப்பானோ அப்போது எல்லாம் உங்களிடம் இருக்கும்”**

இன்ஷாஅல்லாஹ், உங்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் அல்லாஹ் துஆக்களால் நிரம்ப செய்வானாக குறிப்பாக நான் இப்போது உங்களுக்கு வெளிப்படுத்திய துஆக்களால், இந்த அழகிய துஆக்களை நீங்கள் ஓதுவது மட்டுமின்றி உங்கள் மனைவியரையும் குழந்தைகளையும் ஓதுவதற்கு ஊக்குவிப்பீர்களாக இன்ஷாஅல்லாஹ்,மேலும் உங்கள் ஆன்மீகத்தை மேன்மேலும் முன்னேற செய்து உங்கள் வாழ்வை சிறந்த முறையில் மாற்றுவதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக இத்தகைய மேலான ஆன்மீக சீர்திருத்தத்தின் மூலம் நீங்கள் ஒரு ஆன்மீக ஒளியாக பிரகாசித்து உங்களின் மூலம் உண்மையை தேடும் மற்ற மக்களையும் அந்த ஏக இறைவன் அருளுக்குரிய இந்த **நேர்வழியின் பக்கம் , இஸ்லாத்தின் பக்கம் ஸஹீஹ் உல் இஸ்லாத்தின் பக்கம் அழைத்து செல்வானாக**!!!

**இன்ஷாஅல்லாஹ் ஆமீன்**